# 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

## 8.1. பாடநூல் அச்சடிப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம் கீழ்க்குறிப்பிட்ட பாடநூல்கள் மற்றும் கையேடுகளை அச்சடித்து வழங்கி வருகிறது.

1) மாநிலப் பாடத்திட்டப் பள்ளிகளில் 1 - 12 வகுப்புகளுக்கான பாடநூல்கள்.
2) மெட்ரிகுலேஷன் மற்றம் ஆங்கிலோ-இந்திய பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்பு பாடநூல்கள்
3) சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை அனைத்து பாடநூல்கள், +1, +2 மாணவர்களுக்கு மொழி நூல்கள் மட்டும்.
4) ஏ.பி.எல். அட்டைகள் 1 முதல் 4ம் வகுப்பு வரை
5) ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகள் மூலம் நடத்தப்பெறும் பள்ளிகளில் 10 மற்றும் +2 வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் மற்றும் குறிப்பேடுகள்.
6) தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்கு வினா வங்கி, மாதிரி வினா ஏடு, கையேடு (பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக).
7) மாநிலப் பாடத்திட்டப் பள்ளிகளில் +1 மற்றும் +2 வகுப்புகளுக்கு தொழிற்கல்வி பாடநூல்கள், சுற்றுச்சூழல் கல்விக்கான பாடநூல்கள் மற்றும் SLM அட்டைகள் (SSA)

## 8.2. பாடநூல்களின் விநியோகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் 21 வட்டார அலுவலகங்கள் மூலம் இலவச மற்றும் விற்பனை பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. பள்ளிகள் திறந்தவுடன் மாணவர்களுக்கு பாடநூல்கள் எளிதாக கிடைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விற்பனை பிரதிகளை பொறுத்தமட்டில் தமிழ்நாட்டு பாடநூல் கழகம், தமிழ்நாட்டிலுள்ள 42 மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாக மொத்த விற்பனையும் 2000 தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் சில்லறை விற்பனையும் தமிழ்நாடு முழுவதும் செய்கிறது. இதனால், அனைத்து பள்ளிகளும், பள்ளிகள் திறக்கும் முன்னரே மாணவர்களுக்கு தேவைவயான அனைத்து பாடநூல்களையும் பெறுவது உறுதிப்படுத்தப்படுகிறது.

சென்னையில் உள்ள நிர்வாக அலுவலகத்தில் சிறப்பு விற்பனை நிலையம், அனைத்து வேலை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.

## 8.3. இலவசப் பாடநூல்கள்

அரசு மான்யம் பெறும் பள்ளிகள் மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் இயங்கும் சுயநிதி வகுப்புகள் உட்பட 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், இலவசப் பாடநூல்களை பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கி வருகிறது, மேலும் இத்திட்டம் தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத்திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் சுமார் 1,28,514 மாணவ / மாணவியருக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான தொழில்கல்வி பாடநூல்கள் 2006-2007ஆம் கல்வியாண்டிற்கு 129 தலைப்புகளில் முதன்முறையாக அச்சிட்டு அரசின் ஆணைப்படி இலவசமாக வழங்கப்படுகிறது.

## 8.4.சுற்றுச்சூழல் கல்வி

6 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் கல்விக்கான பாடநூல்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### குறிப்பேடுகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், அரசுத்துறை சார்ந்த பள்ளிகளுக்காகவும், மற்றும் வெளிச் சந்தை விற்பனைக்காகவும் குறிப்பேடுகளை தயாரித்து வெளியிடுகிறது.